## திருச்செங்கோடு செங்குந்தர் கல்வி நிறுவனங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட “உலகம் உங்கள் கையில்” மடிக்கணினி வழங்கும் விழா






திருச்செங்கோடு செங்குந்தர் கல்வி நிறுவனங்களில் செங்குந்தர் பொறியியல் கல்லூரி (தன்னாட்சி), செங்குந்தர் மருந்தியல் கல்லூரி, செங்குந்தர் செவிலியர் கல்லூரி மற்றும் செங்குந்தர் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி). ஆகிய கல்லூரிகளில் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்களுக்கு தமிழக அரசின் "உலகம் உங்கள் கையில்" திட்டத்தின் கீழ் 646 மடிக்கணினி வழங்கப்பட்டது. செங்குந்தர் கல்வி நிறுவனங்களின் செயலாளர் மற்றும் தாளாளர் பேராசிரியர் A. பாலதண்டபாணி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். செயல் இயக்குனர் திரு. அரவிந்த் திருநாவுக்கரசு அவர்கள், செங்குந்தர் பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் R. சதீஷ்குமார், செங்குந்தர் மருந்தியல் கல்லூரி முதல்வர் திரு. சுரேந்தர்குமார், செங்குந்தர் செவிலியர் கல்லூரி முதல்வர் திருமதி நீலாவதி மற்றும் செங்குந்தர் கலை அறிவியல் கல்லூரி முனைவர் S.ரவிக்குமார் கலந்து கொண்டனர். நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. துர்கா மூர்த்தி, இ.ஆ.ப, அவர்கள் தலைமையுரை வழங்கினார். நாமக்கல் மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திரு. கு. செல்வராசு அவர்கள் திட்ட விளக்கவுரையாற்றினார். செங்குந்தர் கல்வி நிறுவனங்களின் தலைவர் ஜான்சன்ஸ். திரு.T.S நடராஜன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திரு. E.R .ஈஸ்வரன் அவர்கள் விழா சிறப்புரையாற்றினார். இந்த மடிக்கணினிகள் நவீன செயற்கை நுண்ணறிவுடன்(AI) வழங்கப்பட்டிருப்பது மாணவர்கள் பாடப்புத்தகங்கள் மற்றும் வகுப்பறைகளுக்கு அப்பால் அறிவை ஆராய உதவும், மாணவர்களின் கல்விப் பயணத்தில் ஒரு மிகப்பெரிய மைல்கல்லாகவும் அமையும் என்றும், மாணவர்கள் இவ் வாய்ப்பை பயன்படுத்தி முறையாக சுய ஒழுக்கத்துடன் வாழ்வில் உயர வேண்டும் என்று கூறினார். செங்குந்தர் மருந்தியல் கல்லூரி முதல்வர் முனைவர் . M. சுரேந்திரகுமார் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.




## கம்பன் மொழி” கவியரங்கம்

எங்கள் கல்லூரியில் “கம்பன் மொழி” என்ற தலைப்பில் கவியரங்கம் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ் மன்றத்தைச் சேர்ந்த மாணவர்கள் அனைவரும் ஆர்வமுடன் பங்கேற்று, தங்களின் கவித்திறன், மொழிப்புலமை மற்றும் படைப்பாற்றலை மேடையில் சிறப்பாக வெளிப்படுத்தினர்.


கம்பனின் கவிமொழியின் இனிமை, ஆழம், செறிவு ஆகியவற்றை எடுத்துரைக்கும் வகையில் மாணவர்கள் தாங்களே இயற்றிய கவிதைகளை அரங்கேற்றினர். ஒவ்வொரு கவிதையும் கம்பனின் இலக்கியப் பெருமையையும் தமிழின் வளமையும் உணர்த்தும் விதத்தில் அமைந்திருந்தது.

மாணவர்களின் சொல் தேர்வு, உவமைப் பயன்பாடு, பாவ நயம் மற்றும் உணர்வுப் பூரண வெளிப்பாடு ஆகியவை பார்வையாளர்களின் மனங்களை ஈர்த்தன. இளம் தலைமுறையினர் தமிழ்மொழியையும் இலக்கிய மரபையும் ஆழமாக அணுகும் திறனை இக்கவியரங்கம் வெளிப்படுத்தியது.

தமிழ் இலக்கியத்தைப் போற்றியும், கம்பனின் மொழிச்சிறப்பை நினைவு கூர்ந்தும் அமைந்த இந்நிகழ்வு, தமிழ்மன்றத்தின் செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வாக அமைந்தது.




Dr. C. Aarthi, Prof & Head of ECE department honoured to received NPTEL discipline star award and NPTEL motivated learner star award at IIT Madras 01.02.2026.




Department of Computer Science and Engineering organized five days Faculty development program under the title AI for Healthcare Informatics. As part of FDP , today' s topic is AI in Health care System. Resource person - Dr.B.Sujatha, Professor & Dean Academics,Department of Computer Science and Engineering, Sengunthar Engineering college.

## நுவலிதமிழ் மன்றம் - தினம் ஒரு திருக்குறள்



**குறள் 707:**

**முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்**
**காயினும் தான்முந் துறும்.**

**விளக்கம்:**

**உள்ளத்தில் உள்ள விருப்பு வெறுப்புகளை முந்திக் கொண்டு வெளியிடுவதில் முகத்தைப் போல அறிவு மிக்கது வேறெதுவுமில்லை.**

## இலக்கணக் குறிப்பறிதல்

**சொல்லிலிருந்து சொல்**

ஒரு சொல்லுக்குள் உள்ள எழுத்துகளை இடம் மாற்றி, வேறு பல புதிய சொற்களைக் கண்டறியலாம். இதன் வாயிலாகப் புதிய சொற்களை அறிந்துகொள்ளவும் அவற்றை அன்றாட வாழ்வில் பயன்படுத்தவும் இயலும். எடுத்துக்காட்டாக, 'கவிதை' என்னும் சொல்லிலிருந்து கவி, கதை, விதை, தை முதலான சொற்களை அறிந்துகொள்ளலாம். இந்தப் பயிற்சியை மேற்கொள்வதால், எழுத்துப்பிழை, பொருளற்ற சொற்கள் தவிர்க்கப்படுகின்றன.

## பிறமொழிக்கு இணையான தமிழ்ச் சொற்கள்

பிறமொழி: வருசம் தமிழ்மொழி :ஆண்டு